# சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பொறுப்புக்களைப் பொறுப்பேற்றமைக்கான ஒரு கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாட்டுக் கணிப்பீட்டின் போது சேவைக் காலத்தை குறைத்தும் அதிகரித்தும் கருத்திற்கொண்டமையால் சமூக சக்திப் பிரிவிலுள்ள ஐந்து உத்தியோகத்தர்களுக்காக ரூபா 56,500 தொகையான குறைந்த கணிப்பீடும் 14 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 114,000 தொகையான மிகைக்கணிப்பீடும் இடம்பெற்றிருந்தது.

(ii) 2012 ஆம் ஆண்டின் போது சேவையை விட்டு விலகிச் சென்ற ஓர் உத்தியோகத்தருக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 63,750 தொகையான பணிக்கொடைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதியுரை சேவைகள் வழங்கும் ஒரு நிறுவகத்திற்கு 2011 திசெம்பர் மாதத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 379,104 தொகையான கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இந்திய மக்கள் சபையிடமிருந்து ''கிடைக்க வேண்டியவை'' எனக் கணக்கில் காண்பிக்கப்பட்ட ரூபா 90,577 தொகையை 2008 ஆம் ஆண்டிலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 1,723,450 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 05 முச்சக்கர வண்டிகள் 7% வட்டியுடன் 48 மாதகாலத்தில் அறவீடு செய்யும் அடிப்படையில் 5 பேருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,111,267 தொகையில் ரூபா 847,083 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) 2009 ஆம் ஆண்டின் போது சுய தொழில் மற்றும் தொழில் முயற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 74 பேருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,684,000 தொகையான கடன் தொகை 3 ஆண்டுகளில் அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,404,150 தொகையான தவணைப்பணம் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஈ) அமைச்சினால் மன்றத்தின் சகல செலவினங்களும் மீளளிக்கப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 20,891,832 தொகையில் ரூபா 8,150,154 தொகை மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்குச் சான்றுகள் இல்லாமை

ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கும் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விபரம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (i) | கட்டிடம் - கிரயம் | 234,440 | |
| | மக்கள்சக்தி நிலையக் காணி அளவீடு – புத்தப் பெறுமதி | 1,518,238 | |
| | கணனி மற்றும் உதிரிப்பாகம் - கிரயம் | 28,780,867 | (i) பெறுமதியுடன் இணங்கும் சொத்துக்கள் பட்டோலை |
| | தளபாடங்களும் உபகரணங்களும் - கிரயம் | 18,568,360 | (ii) பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| | மோட்டார் வாகனம் - கிரயம் | 6,557,901 | (iii) நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| | காரியாலய உபகரணம் - கிரயம் | 2,439,427 | |
| | நெல் உபகரணம் - கிரயம் | 25,381,877 | |
| | மின்பிறப்பாக்கி- கிரயம் | 2,311,810 | |
| | கருவிகள் மற்றும் உபகரணம் - கிரயம் | 3,352,670 | |
| | ஏனைய உபகரணம் - கிரயம் | 6,666,146 | |
| (ii) | முச்சக்கர வண்டிக் கடன் | 1,425,618 | பெறுமதியுடன் ஒப்பிடப்பட்ட கடன்பட்டோர் பட்டோலைகள் |
| (iii) | வெளிக்கள பயணத்திற்கான எரிபொருட் செலவினம் | 545,040 | (i) வெளிக்கள பயணத்திற்காக பெறப்பட்ட அங்கீகாரம்<br>(ii) வெளிக்கள பயண நிகழ்ச்சித்திட்டம்<br>(iii) வெளிக்கள பயண அறிக்கை |
| (iv) | கடன் கொடுத்தோர் | 18,752,271 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | இளைஞர் ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட தொப்பிகளும் டீ சேட்களும் | 3,930,000 | (i) | மன்றத்தினால் பொறுப்பேற்ற விபரம் |
| | | | (ii) | கலந்துகொண்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விதம் |
| | | | (iii) | எஞ்சிய அளவு |

**1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 10(5) ஆம் பிரிவு | 2,391,544 | வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட முன்னர் அதற்காக நிதி அமைச்சரினதும் உரிய அமைச்சரினதும் உடன்பாட்டைப் பெற்றுக்கொள்ளாது முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் அவ் வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஆ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவு | 18,373 | ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பை அனுப்பிவைப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக தண்டப் பணம் செலுத்தவேண்டி ஏற்பட்டது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |

| | | | |
|---|---|---|---|
| | நி.பி 371(2) | 318,867 | உரிய செயற்பாடு முடிவடைந்த உடன் முற்பணம் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டின் போது ஓர் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்த ஒரு முற்பணம் மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நி.பி 371(2)(ஆ) | 50,000 | ரூபா 20,000 இற்கு மேற்பட்ட குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி வழங்கப்படலாகாத போதிலும் இதற்கு முரணாக உத்தியோகத்தர்கள் இருவருக்கு முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| | நி.பி 756 | | மன்றத்தின் சகல பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 22/99 ஆம் இலக்க 1999 ஒக்டோபர் 08 ஆம் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் பந்தி | | (i) பணிப்பாளர் சபைத தீர்மானத்தின் படி வரிசை அமைச்சுச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கான உத்தியோகபூர்வ கடமைகளுக்கும் அலுவலகத்திற்கும் இல்லத்திற்கும் பயணிப்பதற்காகவும் உத்தியோகபூர்வ வாகனங்களை ஈடுபடுதத முடியும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மன்றத்தின் 5 உத்தியோகத்தர் களுக்கு அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் இன்றி மேற்குறித்த செயற்பாடுகளுக்காக வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.<br><br>(ii) தனியார் வாகனங்களை உத்தியோக பூர்வ நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவதற்குத் தகமையற்ற ஓர் உத்தியோகத்தருக்கு ஒரு தனிப்பட்ட வாகனத்தை உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்குப் பதிலாக போக்குவரத்துப் படியாக ரூபா 589,425 தொகை வழங்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2008 யூலை 28 ஆந் திகதிய பீஈடீ 50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 01 ஆம் பந்தி | 765,435 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எரிபொருள் எல்லைகளுக்கு மிகையாக 4 உத்தியோகத்தர்களுக்கு எரிபொருட் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றுநிருபம் | | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளைத் திருத்தம் செய்வதற்கு நிறுவனம் தவறியிருந்தது. |
| (எ) | ஐஏஐ/2002/02 ஆம் இலக்க 2002 திசெம்பர் 28 ஆம் திகதிய திறைசேரிச் சுற்றிக்கை | | சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 38,064,921 பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 11,511,530 ஆனமையால் நிதிவிளைவுகள் ரூபா 26,553,391 ஆல் வீழ்ச்சியுற்றிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 10,174,181 ஆல் குறைவடைந்தமையும் செலவினம் ரூபா 16,379,210 ஆல் அதிகரித்தமையும் இதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதி விளைவுகள் பல்வேறு கட்டங்களில் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | 2011.12.31 | 2010.12.31 | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வருடாந்த பெறுமானத்தேய்வு மற்றும் தீர்ப்பனவுச் செலவினம் சீராக்கப்படுவதற்கு முன்னரான இலாபம் | 1,525,649 | 11,325,203 | 9,799,554 |

| | | | |
|---|---|---|---|
| வருடாந்த பெறுமானத்தேய்வு மற்றும் தீர்ப்பனவுச் செலவின அளவு | 39,590,570 | 22,836,733 | 16,753,837 |
| வருடாந்த பெறுமானத்தேய்வு மற்றும் தீர்ப்பனவுச் செலவினம் சீராக்கப்பட்டதன் பின்னர் நட்டம் | (38,064,921) | (11,511,530) | 26,553,391 |

**2.3 மூலதன வீழ்ச்சிச் சந்தர்ப்பங்கள்**

---------------------------------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் திரண்ட நிதியத்தின் செலவு மீதி ரூபா 40,237,761 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டிற்கான நட்டமான ரூபா 38,064,921 தொகை ரூபா 4,109,838 தொகையான கடந்த ஆண்டிற்கான சீராக்கத்தை மேற்கொண்டதன் பின்னர் ஆண்டின் இறுதியில் திரண்ட நிதியம் ரூபா 1,936,998 ஆன வரவு மீதியாகியிருந்தது.

**2.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது வரிசை அமைச்சின் செலவினமான ரூபா 7,626,342 மன்றத்தால் செலவிடப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டிற்கான செலவினமும் உள்ளடங்கலாக ரூபா 4,112,753 தொகை மேலும் அமைச்சினால் மீளளிக்கப்பட வேண்டியிருந்தது.

(ஆ) தலைமைக் காரியாலத்தை இயக்குவதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வாடகைக் கட்டிடத்திற்காக மன்றத்தால் 2009 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 3,227,524 தொகையான திருத்தற் செலவினத்தை அவ்வாண்டு உள்ளடங்கலாக எதிர்வரும் நான்கு ஆண்டுகளின் போது மன்றத்தின் இலாபத்திற்கு எதிராக பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் இதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கு எதிராக ரூபா 806,881 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

மக்கள் சக்தி நிலையங்கள் அமைந்துள்ள காணிகளை மன்றத்திற்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு 2007 ஆம் ஆண்டில் உரிய காணிகளை அளப்பதற்காக ரூபா 1,518,238 தொகையும் மீளாய்வாண்டின் போது ரூபா 704,410 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. செலவிடப்பட்ட ரூபா 2,222,648 தொகையான மொத்தச் செலவினம் மூலதனமாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அக் காணிகள் மன்றத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

மன்றத்திற்குச் சொந்தமான ரூபா 398,989 பெறுமதியான ஞாபகார்த்த கோப்பைகளின் இருப்பு 2006 ஆம் ஆண்டிலிருந்து 2012 செப்தெம்பர் வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.3 பதவியணி

2005 யூன் 27 ஆம் திகதிய பணிப்பாளர் சபைப் பத்திர இல. 3 இன் பிரகாரம் மன்றத்திற்காக பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டு முதல் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்ஆளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பீஈடி/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மன்றத்தால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 4 மாத காலதாமதத்தின் பின்னர் 2012 யூலை 02 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 4.2 கூட்டுத்திட்டம்

-----------------------

பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் நோக்கையும் செயற்பணியையும் செயற்படுத்துவதற்காக கூட்டுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

--------------------------------------

கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை மேற்கொள்வதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------------

வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மன்றத்திற்கான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.5 கணக்காய்வுக் குழு

-------------------------------

பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வுக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 கொள்வனவுத் திட்டம்

--------------------------------

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் மன்றத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவனம் முழுவதற்குமாக மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிராமையால் பாதீடு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்படுவதற்கு இருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சினால் மன்றத்தின் செலவினங்களை மீளளிப்பதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் நிதித் தேவைப்பாட்டிற்காக மன்றத்தால் ஓர் உத்தியோகத்தரிடம் இருந்தும் கௌரவ அமைச்சரிடம் இருந்தும் குறுங்காலக் கடனாக முறையே ரூபா 200,000 தொகையும் ரூபா 1,100,000 தொகையும் பெறப்பட்டு மீள தீர்க்கப்பட்டிருந்தது.

**4.8 வருடாந்த அறிக்கையை சபையில் முன்வைத்தல்**

---

மன்றத்தால் எவ்வித வருடாந்த அறிக்கையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிதிக்கூற்றுக்கள்
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) நிதிகளின் பயன்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) சொத்துக்கள் நிர்வாகம்
(ஊ) கடன் அறவீடுகள்
(எ) பெறவேண்டிய கணக்குகள்